140. ''சிறுதொழில்களுக்கு சிட்கோவின் சிறப்பான சேவை —1982'' என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

141. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகளுடன் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 16ஆவது அறிக்கை (ஏழாவது பேரவை).

இணைப்பு I.

(5ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 582—க்கான விடையைக் காண்க.)

(1) பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வளர்ந்த பல நிறங்களில் பூத்துக்குலுங்கும் மரங்களையும், தென்னை மரங்களையும்; கடற்கரைக்கு எழிலூட்டும் வகையில் மறு நடுவை செய்தல். (By Burlapping Method)

(2) சீரணி அரங்கத்தில் கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் கார்டூன் படக்காட்சிகளும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(3) சீரணி அரங்கத்திலிருந்து வெளியே செல்ல மணலின் நிறத்தோடு பொருந்தும் நிறத்தில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் ;

(4) திறந்த வெளி சிற்றுண்டிச் சாலைகள் நடத்துதல் ;

(5) திறந்த வெளி உடற்பயிற்சிச் சாலை ஒன்றினை ஏற்படுத்துதல் ;

(6) கடற்கரை மணற்பரப்பில் அழகிய வடிவமைக்கக்கூடிய குப்பைத் தொட்டிகளை வைத்தல் ;

(7) கட்டுமரங்கள் மற்றும் மீன்பிடிக்கும் வலைகளை மெரினாவுக்கு வரும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் குறிப்பிட்ட சில இடங்களில் வைக்க ஏற்பாடு செய்தல்.;

(8) மணற்பரப்பை அசுத்தம் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கவும் மணற்பரப்பை தூய்மையான நிலையில் பராமரிக்கவும் ஓர் துப்புரவு ஆய்வாளரை நியமித்தல் ;

(9) மணற்பரப்பை அசுத்தம் செய்வோருக்குத் தண்டனை வழங்க ஓர் நடமாடும் நீதிமன்றத்தை ஏற்படுத்துதல் ;

1982 மார்ச் 20]

(10) கடற்கரை பகுதி முழுவதற்கும் பாதுகாப்பு அளிக்க அதிக காவலர்களை நியமித்தல் ;

(11) மின்சார விளக்குகளுடன் கூடிய அழகிய விளம்பரப் பலகைகளை அமைத்தல்.

இணைப்பு II

(34ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 579க்கான விடையைக் காண்க).

விடை...

(அ) இம்மாநிலத்திற்குள் ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்துக்களில் காயமடைந்தவர் அல்லது விபத்தில் மரணமடைந்திருந்தால் அவர் தம் குடும்பத்தினர் மருத்துவச் செலவையும் பிற உடனடிச் செலவுகளையும் செய்ய ஏதுவான வகையில் முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியர் மூலமாக ரொக்க உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) விபத்துக்குள்ளானவர்களுக்கு அல்லது விபத்தில் மரணமடைந்திருந்தால் அவர் தம் குடும்பத்தினர்களுக்குக் கீழ்க்கண்ட வீதங்களில் ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது.

தொடர் எண்.	விவரங்கள்.	வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.	யாரிடம் கொடுக்கப் படவேண்டுமென்பது
1	விபத்தில் மரணம் அடைந்தால்	1,000	(1) கணவன் (2) மனைவி (3) இறந்தவர் கடைசியாக தங்கியிருந்த மகன் அல்லது மகள் அல்லது ஒரு மகன் அல்லது ஒரு மகளுக்கு மேற்பட்டிருந்தால் அவர்களில் மூத்தவர், (4) தாய் (5) தகப்பன், (6) தங்கை / அக்கா (7) இறந்தவர் தங்கியிருந்த குடும்பத்தில் ஆண் உறுப்பினர்.

TRUTH ALONE TRIUMPHS